

Ph : 04362 - 262662
Cell : 9486262662

# SRI THYAGABRAHMA MAHOTSAVA SABHA (REGD.)

(19 of 1941)

31, THIRUMANJANA VEETHI, THIRUVAIYARU - 613 204.
THANJAVUR - DT.

**President :**
Sri. G.K.VASAN M.P.
Chennai.

**Secretaries :**
Aridwaramangalam
Sri. A.K.PALANIVEL
"SHREE" 5/6 (OLD No.3)
Pushpa Colony 1 Cross Street,
Arunachalam Road,
Saligramam, Chennai - 600 093.

Srimushnam
Sri. V.RAJA RAO
Old No.23/3, Moosa Street,
T.Nagar, Chennai - 600 017.

**Treasurer :**
Sri. R.GANESH
18/21, Banadurai Sannathi Street,
Kumbakonam - 612 001.

**Asst. Secretaries :**
1. Sri. T.R.GOVINDARAJAN
Thanjavur.
2. Sri. O.S.ARUN
Chennai.
3. Sri. R.ASHOK RAMANI
Chennai.
4. Sri. K.N.RAJAGOPALAN
Kumbakonam.
5. Sri. T.K.RAVICHANDRAN
Paruthikudi.

Date : 12.01.2022

சத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 175 வது வருட ஆராதனை விழாவினை சபையின் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி விழா குழுவினர் எதிர்வரும் ஜனவரி 18 ஆம் தேதி முதல் 22 ஆம் தேதி வரை ஐந்து நாட்கள் சிறப்பாக நடத்துவதற்கு உண்டான அனைத்து ஏற்பாடுகளும் செய்து வந்தனர். எனினும் மிக வேகமாக பரவி வரும் கொரோனா மற்றும் உருமாறிய கொரோனா, ஓமைக்ரான் வைரஸ் தொற்று நோயை கருத்தில் கொண்டும் விழாவில் கலந்து கொள்ளும் இசைக்கலைஞர்கள், ரசிகர்கள் மற்றும் பொதுமக்கள் என அனைவரின் நலனை உறுதி செய்யும் வகையிலும், விழா ஏற்பாடுகள் சபையின் தலைவர் அவர்களால் விழா குழுவினருடன் கலந்து ஆலோசித்து மறுபரிசீலனை செய்யப்பட்டது. அதனடிப்படையிலும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிலையான வழிகாட்டு நடைமுறைகளை கருத்தில் கொண்டும், தஞ்சை மாவட்ட ஆட்சியர் அவர்களின் வேண்டுகோளின்படியும் இவ்வருட ஆராதனை விழாவினை சத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் முக்தியடைந்த பகுள பஞ்சமி தினமான ஜனவரி 22 ஆம் தேதி (சனிக்கிழமை) ஒரு நாள் மட்டும் நடத்துவதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. ஜனவரி 18 ஆம் தேதி முதல் 21 ஆம் தேதி வரை ஏற்பாடு செய்யப்பட்ட அனைத்து நிகழ்ச்சிகளும் ரத்து செய்யப்படுகிறது.

ஜனவரி 22 ஆம் தேதி அன்று காலை வழக்கம்போல் உஞ்சவிருத்தியும் பின்னர் விழாப்பந்தலில் நாதஸ்வர கச்சேரியும், அதன் பின்னர் சத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிக்கு அபிஷேகம், ஆராதனை மற்றும் சமூக இடைவெளியுடன் குறைந்த அளவிலான இசைக்கலைஞர்களை கொண்டு பஞ்சரத்தின கீர்த்தனையுடன் கூடிய இசை அஞ்சலியுடன் இவ்வருட ஆராதனை விழா நிறைவு பெறும். மாவட்ட நிர்வாகத்தின் வேண்டுகோளின்படி விழா பந்தலுக்குள் 100 நபருக்கு மேல் அனுமதியில்லை என்பதால் விழாவின் போது பந்தலுக்குள் பொதுமக்களுக்கு அனுமதியில்லை என விழா குழுவினர் சார்பில் தெரிவிக்கப்படுகிறது.

சபையின் புரவலர்கள், நலன்விரும்பிகள், ரசிகர்கள் மற்றும் பொதுமக்களின் நலன் கருதியும் மற்றும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் அரசிற்கு முழு ஒத்துழைப்பு கொடுக்கும் வகையிலும், இவ்விழாவில் கலந்து கொள்ளும் அனைவரும் 2 தடுப்பூசி செலுத்திக்கொண்டதற்கான சான்றிதழை கொண்டுவர வேண்டும் என்றும், இப்படி எடுக்கப்பட்ட இந்த முடிவினை ஏற்றுக்கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். வரும் காலங்களில் எப்போதும் போல் தாங்கள் அனைவரும் ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஜி.கே.வாசன்

தலைவர்
ஸ்ரீ தியாக ப்ரம்ம மகோத்சவ சபா
திருவையாறு